1982 பிப்ரவரி 6]

உற்பத்தி செய்யப்பட்டு, பிலிப்ஸ் போன்று வேறு பல புகழ் பெற்ற கம்பெனிகளின் பெயர்களை முத்திரையாக மேலே குத்தி விடுகிறார்கள் என்று சொல்கிறார்களே, இதை தவிர்க்க நீண்ட காலம் உழைக்கக் கூடிய தரமானவை என்ற அளவில் உத்தரவாதம் பெற்று தொடர்ந்து அந்தத் தரத்தைக் காப்பாற்றக்கூடிய நிலைமையில் உள்ள கம்பெனிகளிடமே நேரிடையாக உத்தரவாதம் பெற்று வாங்குவதற்கான முறையில் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வகையில் இந்தப் பல்புகளை வாங்குவதற்கு டெண்டர்களை போட்டாலும் அடிஷனல் என்ஜினீயர் லெவலிலே 2,500 ரூபாய்தான் வாங்குவதற்கான அனுமதி இருக்கிறது. அதனால் மேற்கொண்டு வாங்க இயலாது என்று சொல்கிறார்களே, அதைத் தவிர்ப்பதற்கு அந்த அனுமதியை 5,000 ஆக உயர்த்தி கொடுக்க அரசு பரிசீலிக்குமா? அப்போதுதான் எரியாத பல்புகளை மாற்ற இயலும் என்ற வகையில், அரசு இதனை ஆராயுமா என்று கேட்க விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

விவசாயத்திற்காக பொருத்தப்பட்டுள்ள மின்சார மோட்டார்கள்.

*வினா எண் 63—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விவசாயிகள் பொருத்தியுள்ள மின்சார மோட்டார்கள் பெரும்பாலானவைகள் தரம் குறைந்தவைகளாக உள்ளதால் கூடுதல் மின்சாரம் செலவாகின்றது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்திக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) அண்டு (ஆ) பம்பு செட்டுகளில் உள்ள குறைபாடுகளை கணிக்கவும், அவற்றை நிவர்த்தி செய்யவும், நிவர்த்தி செய்வதால் ஏற்படும் மின் சேமிப்பை அளவிடவும் தமிழ்நாடு மின்வாரியம் தற்போது ஒரு ஆய்வை மேற்கொண்டுள்ளது, இந்த ஆய்வின் முடிவு தெரிந்த பின்தான் உண்மை நிலை புரியும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்காக உற்பத்தி செய்யப்படுகிற மின்சார பம்பு செட்டுகளைக் குறித்து சோயம் புத்தூரில் இருக்கும் பல்கலைக் கழகம் ஆய்வு நடத்தி, ஏறத் தாழ 70 சதவீதத்திற்கு மேற்பட்ட மோட்டார்கள் தரம் குறைந்துள்ளனவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். விவ சாயிகள் உபயோகிக்கிற மின்சார பம்பு செட் மோட்டார் களுக்கும், குறைந்த பட்சம் 40 சதவீதம் மின்சாரம் தேவைப் படும் என்று அந்த ஆய்வில், பல்கலைக் கழகமே கூறுகிறது. சென்னை ஐ.எஸ்.எஸ். மார்க்குகள் அந்த மோட்டார்களில் இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தரமான மோட்டார்களுக்குத்தான் மின் இணைப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்ற வகையில் மின்சார வாரியத்திற்கு அரசு உத் தரவு இடுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்சார மோட்டார்களை வாங்குவதிலிருந்து, அவைகளிலே தரமான பொருள்கள் (பாகங்கள்) போன்றவற்றை பொருத்து வதினாலும் பல வகையில் மின்சாரத்தை நாம் மிச்சம் பிடிக்கலாம். அண்மையிலே குஜராத்தில் அது பற்றி ஒரு விரி வான ஆய்வினை மேற்கொண்டார்கள். அதில் அவர்கள் கண் டது, சாதாரணமாக 100 சதவீதம் மின்சாரம் பயன்படுத்த வேண்டிய விவசாயி 150-லிருந்து 200 சதவீதம் இப்பொழுது மின்சாரத்தை பயன்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. அத் தோடு மட்டுமல்ல, சில முறைகள் மூலம் 20-லிருந்து 50 சத வீதம் வரையில் மின்சாரத்தை மிச்சப்படுத்தலாம் என்றும் சொல் லியிருக்கிறார்கள்.

ஆகவே விவசாயிகளுக்கும் இதன் மூலம் மின் கட்டணம் குறையும். மின்சார வாரியத்திற்கும் இதன் மூலம் மின்சாரம் மிச்சப்படும். நம் மாநிலத்தில் இதை எந்தெந்த வழிகளில் செய்யலாம் என்பதைப் பற்றி ஆராய ஏற்கெனவே ஒரு குழு போடப்பட்டு, அவர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மின்சார மோட்டார்கள் தரம் குறைந்ததாக இருப்பது மட்டுமல்லாமல், மின்சாரம் முறையாகக் கொடுக்காததால் சிங்கிள் பேஸில் வரும்போது மோட்டார் கெட்டு விடுகிறது. ஆக, கிராமங்கள் நிரந்தரமாக அமாவாசை யாக இருக்கிறது. இத்தகைய குறைகளைப் போக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா? அல்லது மின்சாரத் துறை அமைச் சர் பொறுப்பை.........

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அமாவாசையில் யாரும் போய் பம்ப் செட்ஸ் போடுவதில்லை. ஆகவே அமா வாசைக்காக மின் இலாகாவை அம்பிகாபதி அவர்களிடம் கொடுக்க வேண்டிய அவசியம் நிச்சயமாக இல்லை. பொதுவாக மின் சாரம் விநியோகிப்பதில் எந்தளவிற்கு தரத்தை அதிகப்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு மின்வாரியம் தகுந்த நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது. என்பதை உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள்.

1982 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : குடியாத்தம் போன்ற பகுதிகளில் ஏற்கனவே அந்தத் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்த மாவட்டத்தில் வேறுபகுதியில் தேவை என்ற அவசியம் ஏற்பட்டால் அந்தத் தகவலை அரசின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்தால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. எஸ். இராசு : அமைச்சர் அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது—விளக்கத்திற்காகக் கேட்கிறேன். இப்பேர்ப்பட்ட தொழிற்சாலைகள் கட்டி ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன அல்லது தரப்பட்டிருக்கின்றன என்ற தகவலைத் தந்தார்கள். அந்தத் தொழிற்சாலைகள் தற்போது இயங்கு கின்றனவா ? அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைத் திறந்து வைக்க நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆத்தூர் பகுதிக்கும் சேலம் பகுதிக்கும் அண்மையில் சென்று வந்தார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் இராசு அவர்களும் தவறாக என்னைப் புரிந்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் அவரும் நானும் கால் நூற் றாண்டுகளாகப் பழகி வருகிறோம். தலைவாசல் சட்டமன்ற உறுப்பினர் சகோதரி இராசம்மாள் தலைமையில் 200 தொழிற் கூடங்கள் கடந்த நவம்பர் மாதம் ஆத்தூர் நகரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தத் தலைவரும் இங்கே இருக்கிறார், அவரையும் கேட்டுக் கொள்ளலாம். ஆத்தூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். அவரும் அதிலே கலந்து கொண்டார்கள். அவரிடத்திலும் விவ ரம் கேட்டுக் கொள்ளலாம். ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய் முதலீட்டில் நாலாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் விழாவில் கலந்து கொண்டு பாராட்டினார்கள் அவர்கள் சாட்சிகளாக மன்றத்தில் இருக்கிறார்கள்.

கப்பலூர் தொழிற் பேட்டை

* வினா எண். 65—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மதுரைக்கு அருகில் உள்ள கப்பலூர் தொழிற்பேட்டை யில் போதுமான இடம் இருந்தும் இன்னும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படாததன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : கப்பலூர் தொழிற்பேட்டைக்குக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் 9 ஏக்கர் நிலம் திருமங்கலம் வட்டத்திலும் மீதமுள்ள நிலம்